பஞ்ச பூத ஸ்தலங்கள [422-1921]

பழமுதிர சோலை [494 ,, ]

# பஞ்சபூத ஸ்தலங்கள்

| எண் | பாடல் | எண் | பாடல் |
|---|---|---|---|
| | காஞ்சீபுரம் | | திருவானைக்கா |
| 422 | அதிமதங் கக்க | 441 | அனித்தமான |
| 423 | அறிவிலாப | 442 | ஆலமறைக |
| 424 | அற்றைக் | 443 | குருதிபுலாலெ |
| 425 | எனக்குச | 444 | நாடித்தேடி |
| 426 | கருமமான | 445 | பரிமள மிகவுள |
| 427 | கறையிலங் | | திருவருணை |
| 428 | கனிதரும் | 446 | அருக்கார் |
| 429 | கொத்தார் | 447 | அமுதுமாவா |
| 430 | சீசி முப்புர | 448 | இமராஜனி |
| 431 | செறிதரும | 449 | இரவியுமதி |
| 432 | தலைவலையத்து | 450 | இரவுபகற் |
| 433 | நச்சரவ | 451 | இருவா மயலோ |
| 434 | படிறொழுக்க | 452 | இருவினையஞ்ச மல |
| 435 | புரைபடுஞ் | 453 | இருவினையூண் |
| 436 | புனமடந்தை | 454 | கடல்பரவு |
| 437 | பொக்குப்பை | 455 | கயல விழித்தேன் |
| 438 | மக்கட்கு | 456 | கரிமுகக் |
| 439 | முட்டுப் பட்டு | 457 | கருணை சிறிது |
| 440 | வம்பறச | 458 | குமரி காளி |
| | | 459 | குழவியுமாய் |

# பஞ்சபூத ஸ்தலங்கள்

| எண் | பாடல் | எண் | பாடல் |
|---|---|---|---|
| | திருவருணை (contd) | | சிதம்பரம் (contd) |
| 460 | காணாத தூர | 476 | திருநமோரா |
| 461 | கீத விநோத | 477 | எழுப்புத தோல் |
| 462 | சிவ மாதுடனே | 478 | எழுகடல மணலை |
| 463 | செய செய அருணா | 479 | கடடிமுண்ட |
| 464 | தமர குரங்களு | 480 | கனக சபை |
| 465 | பரியகைப் பாசம் | 481 | காய மாய வீடு |
| 466 | புலையனா | 482 | காவியுடுத்து |
| 467 | வேதக விரோத | 483 | குகனெ குருபரனே |
| 468 | வலிவாத பித்த | 484 | கைத்தருண |
| 469 | விதியதாகவெ | 485 | கடரனைய |
| 470 | விரகொடு வளை | 486 | தறுகணனா |
| | திருக்காளத்தி | 487 | நஞ்சினைப் |
| 471 | சரக்கேறி | 488 | நாடா பிறப்பு |
| 472 | சிரத்தான | 489 | பரம குருநாத |
| 473 | பரகயரை | 490 | மனமே உனக்கு |
| | சிதம்பரம் | 491 | வந்து வந்து வித |
| 474 | அவகுண | 492 | வாத பித்தமொ |
| 475 | திருவினையின் மதி | 493 | விடுங்கைக் |

## பழமுதிர் சோலை

| எண் | பாடல் | எண் | பாடல் |
|---|---|---|---|
| 494 | அகரமுமாகி | 498 | சீலமுள தாயர |
| 495 | ஆசை நாலு | 499 | தலைமயிர் |
| 496 | கருவாகிய | 500 | துடிகொணேய |
| 497 | காரணமதாக | 501 | வாதினையடர்ந்த |

## திருப்புகழ் பத விளக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | எட்டுத் திக்கர் ... ... ... | 173 |
| 2 | முப்பத்திரண்டு அறங்கள் ... ... | 173 |
| 3 | சூரியப் புவிக் கேறி ... .. | 173 |
| 4 | பஞ்ச கோசங்கள் ... .. | 174 |
| 5 | புனித சங்கம் - பாதசஜனயம் ... ... | 174 |
| 6 | சிவ சக்திகள் நான்கு ... ... | 174 |
| 7 | சரண கஞ்சத்திற் பொற கழல கட்டியதலை .. .. | 175 |
| 8 | சரியை, கிரியை, யோகம், ஞானம் .. .. | 175 |
| 9 | ஆறு அங்கங்கள் - வேத புருஷனுக்குரிய ... ... | 176 |
| 10 | உதய மரணமில் பொருள ... ... | 176 |
| 11 | போத மலா எட்டு .. ... | 176 |
| 12 | முத்தர்கள் நான்கு வகை ... ... | 177 |
| 13 | இருளும் ஓர் கதிர் / அந்தி பகல் / கேவல சகலம் ... | 177 |

| | | |
|---|---|---|
| 14 | எட்டிரண்டு - தச காரியங்கள் ... ... | 177 |
| 15 | எட்டிரண்டுருவாகி - 16 திருவுருவ வகைகள் ... | 177 |
| 16 | 96 தத்துவங்கள் .. . ... | 178 |
| 17 | 36 தத்துவங்கள் ... ... | 179 |
| 18 | யோக பேத வகை எட்டு - அஷ்டாங்க யோகம் ... | 179 |
| 19 | ஆறுமுகம - ஆதியொடும் அந்தம் ஆகிய நலன்கள் ... | 179 |

# பழமுதிர் சோலை 494

(494) சிந்து பைரவி / பூ கல்யாணி (3½) (ப) 2+½

அகரமும் ஆகி அதிபனும் ஆகி அதிகமும் ஆகி அகம் ஆகி

அயன் என ஆகி, அரி என ஆகி அரன் என ஆகி அவர் மேலாய் *

இகரமும் ஆகி, எவைகளும் ஆகி, இனிமையும் ஆகி வருவோனே

இரு நில மீதில் எளியனும் வாழ எனது முன் ஓடி வரவேணும்

மகபதி ஆகி மருவும் வலாரி மகிழ் களி கூரும் வடிவோனே

வனம் உறை வேடன் அருளிய பூஜை மகிழ் கதிர்காமம் உடையோனே

செக கண சேகு தகு திமி தோதி திமி என ஆடும் மயிலோனே

திருமலிவான பழமுதிர் சோலை மலை மிசை மேவு பெருமாளே

---

(495) பீம்பளாஸ் (7) (ப) (1½+1½+1)+(1½+1)+(1½+1)) 495 *

ஆசை நாலு சதுரக கமலம் உற்று இன் ஒளி

வீசி ஓடி இரு பககம் ஊடு உறச் செல்வழி

ஆவல் கூர மண்முதற் சலச பொற்சபையும் இந்து வாகை

494 எழுத்துக்களுள் "அகரம்" முதலாய் நிற்பது போல், எப்பொருளுக்கும
முதற் பொருளாகி, எல்லா உலகங்கட்கும் தலைவனாகி, எவைக்கும
மேம்பட்டதாகி. "நான் நான்" எனும் உட்பொருளாகி / முத்தி வீடாகி
பிரமன என்னும் படைப்புத் தொழிலனாகி, திருமால் என்னும காத்தல்
தொழிலனாகி, அரன் என்னும் அழித்தல தொழிலனாகி, இம்மூவர்க்கும்
மேலான பொருளாகி

இங்குள்ள பொருள்களாகி. பின, எங்குள்ள எல்லாப் பொருள்களும் ஆகி
இனிமை தரும் பொருளாகியும் வருபவனே/

பெரிய நிலவுலகத்தின் கண் எளியனாகிய அடியேனும் வாழ என்
முன்பு ஓடி வந்து ஆட்கொள்வீர

யாகங்களுக்கு அதிபதியாக விளங்கி. வலன என்ற அசுரனைக
கொன்ற இந்திரன மகிழ்ச்சியும் களிப்பும் மிகவும் கொண்டும் அழகனே/

காட்டில் வசித்த வேடன் அன்புடன் செய்த பூஜையை. மகிழ்ந்து
ஏற்றுக் கொண்ட கதிர்காமத் தலத்தைக் கொண்டவனே/

செக கண சேகு தகு திமி தோதி திமி என ஆடும் மயில் வாகனனே/
லக்ஷ்மீகரம் நிறைந்த பழமுதிர் சோலை மலை மேல் வீற்றிருக்கும் பெருமாளே

---

495

495 திசைகள் நான்கு (பக்கங்கள் நான்கு) கொண்ட சதுரமான (மூலாதார
நான்கிதழ்) கமலத்தில் பொருந்தி இனிய (நல்ல) ஒளி வீசிட ஓட, இரண்டு
பொருந்தச் செல்கின்ற (இடை பிங்கலை எனும் இரு நாடிகளின் வழி
யாக ஓடுகின்ற) வளி- காற்று - பிராணவாயுவை, விருப்பம் மிக்கெழ.
பருதி வழி - திருவாரூரை ஆதாரத்தலமாகக் கொண்ட மூலாதாரத்துக்கு
அடுத்த சுவாதிட்டான முதல ஆக்ஞை ஈறாக உள்ள ஐவகைக் கமலங்களிலு
ம்

ஆரஞேனு பதியிற் கொள நிறுத்தி வெளி
அரு(ம்) சோதி நூறு பத்தினுடன் எட்டு இதழ்
ஆகி எழும் அளவிட்டு அருண விற்பதியின் விந்து நாத

ஓசை சாயுமம் ஒரு சத்தம் அதிகப் படிக
மோடு கூடி ஒருமித்து அமுத சித்தியொடு
ஓதும் வேத சர சத்தி அடி உற்ற திரு நந்தி வடே

ஊமையேனை ஒளிரவித்து உனது முத்தி பெற
மூல வாசல் வெளிவிட்டு உனது உரத்தில் ஒளிர்
யோக வேத வகை எட்டும் இதில் ஒட்டும வகை இன்று தாராய்

வாசி வாணிகன் எனக் குதிரை விற்று மகிழ
வாத வூரன அடிமைக் கொளுக் கருணைக் கடவுள்
மாணிக ரூபன் மக மத்திகை, விதத்து, அருண செம் கையாளி

வாகு பாதி உறை சத்தி கவுரிக குதவு
வாயின மாது, துகிர யச்சை வடிவச் சிலை என
மாசு சோர எழு பிறப்பையும் அறுதத உமை தந்த வாழ்வே

ஒட வைத்து, கனக சபையும், சந்திர காந்தியும்,

திரம்பி விளங்க. (சந்திர. சூரிய அக்கினி) மூன்று மண்டலங்களிலும் பொருந்த நிறுத்தி பின்பு அங்கே வெளிப்பட்டுப் பிரகாசிக்கும் ஜோதியாம் ஆயிரத்தெட்டு இதழோடும் கூடியதான ஒரு கமலத்திற செலுத்தி, ஆறு ஆதாரங்களுடன பிரமரந்திரம் கூடிய ஏழு இடங்களையும் அளவிட்டறிந்து (கண்டறிந்து) சிவந்த ஒளியுடன கூடிய துவாதசாந்தத் தானத்தில் (விந்து நாத) சிவதத்துவ நாத - பிரமநாத

ஓசை மிகுந்துள்ள ஒப்பற்ற சத்தம அதிகமான பளிங்கன்ன காட்சி-யுடன் கூடியதாய் ஒன்று சேர்ந்து, மதிமண்டலத்தினின்றும் பெருகிப் பாயும் கலா அமிர்தப் பேறுடன், ஓதப்படும் வேதம் சொல்லுகின்ற வாசி சத்திக்கு ஆதாரமாகவுள்ள ஸ்ரீ நந்தி ஒளிக்குள்ளே

உண்மையாகிய என்னை விளங்க வைத்து (ஸ்ரீ நந்தி ஒளியை அடியேனுக்குத் தெரிசிப்பித்து) நீ அருளும் முத்தி நிலையைப் பெற, பிரமரந்திரம் எனப்படும் மேல்வாசல் வெளி விட்டு விளங்க, உனது அருளாற்றலால் (திருவருள வலிமையினால்) விளங்குகின்ற யோக விதங்கள் எட்டும் இதில் பொருந்தும் வகைமையை இன்று தந்தருளுக

குதிரை வியாபாரி என வந்து குதிரைகளை விற்று மகிழ்ந்த திருவாதவூரராம் மாணிக்க வாசகரை அடிமை கொண்ட கிருபாகர மூர்த்தி, பொன் உருவத்தினன், ஒலிக்கின்ற குதிரைச் சம்மட்டி. வணக்கங்களைக் கொண்ட செவ்விய திருக்கையை உடையவனும் சிவனுடைய

அழகிய இடது பாதியில் உறைகின்ற சத்தி. கௌரி, மழலை சொல் பேசும் மாது, பவள நிறமும் பச்சை நிறமும கொண்ட வடிவினள் சிவை (மங்களம பொருந்தியவா) எனது கூற்றம் நிறைந்த ஏழு பிறப்புக்களையும அறுத்த உமாதேவி என்ற செல்வமே!

காசி ராமேசுரம் ரத்நகிரி சர்ப்பகிரி
ஆரூர் வேளூர தெவூர் கச்சி மதுரைப் பதியல்
காவை ருதுர் அருணைக்கிரி. திருத்தணியல் செந்தில் நாகை
காழி, வேரூர், பழநிக்கிரி. குறுக்கை - திரு
நாவலூர், திருவெணெய்ப்பதியின், மிக்க திகழ்
காதல் சோலை வளர வெற்பில் உறை முத்தர் புகழ் தம்பிரானே

(496) தேதுக (7) (6) 1300 496

கரு ஆகியெ தாய உதரத்தினில்
உருவாகவெ கால் கை உறுப்பொடு
கனி வாய விழி நாசி உடற் செவி நரை மாதர்
கையிலே விழ ஏகி அணைத் துயில்
எனவே மிக மீது துயிற்றிய
கருது ஆய் முலை ஆர் அமுதத்தினில் இனிதாகி
தரு தாரமும் ஆகிய சுற்றமும்
நல வாழ்வு(ம்) நிலாத பொருள் பதி
சதமாம் இது தான என உற்று உனை நினையாத
சதுராய் உன தாள் இணையைத் தொழ
அறியாத நிர்குடனை நிற புகழ்
தனை ஓதி மெய்ஞானம் உறச் செய்வது அருநாளே
செருவாய் எதிராம அசுரத் திரள்
தலைகளொடு நிணத் தசை
திமிர் தாது உள பூத கணத்தொடு அரு பேய்கள்

காசி, ராமேசுவம். ரத்நகிரி திருச்செங்கோடு. திருவாரூர். வேலூர். தேவூர். காஞ்சீபுரம். மதுரை. திருப்பறியலூர். திருவானைக்கா. பழம் பதியாகிய திருவண்ணாமலை, திருத்தணிகை. திருச்செந்தூர். நாகப்பட்டினம் சீகாழி, வேளூர், பழநிமலை. திருக்குறுக்கை, திருநாவலூர். திருவெண்ணெய நல்லூர் என்னும் தலங்களிலும், விசேடமாக விளங்குவதும் உனக்குப் பிரியமானதுமான சோலை வளர் மலையிலும் (சோலை மலையிலும்) உறைகின்ற சீவன் முத்தர்கள் புகழ்கின்ற தம்பிரானே!

---

(496) கருவாய் அமைந்து தாயின் வயிற்றிலே உருவம் பெற்று. கால் கை என்னும் உறுப்புக்களுடன், இனிய வாய், கண் மூக்கு. உடல், காது (எனனும் உறுப்புக்களொடும், மருத்துவச்சியின்

கையில் விழும்படி வந்து படுக்கையில் தூங்கு என்று மிகவும் சீராட்டிப் படுக்கைமேல் தூங்கச் செய்த, நலத்தை எண்ணுகின்ற அன்னையின் முலையில் நிறைந்துள்ள பாலில் பிரியனாகி (வளர்ந்து)

(தனக்கென) அமைந்த மனைவி. உடையாகியுள்ள உறவினர்களும். நல்ல வாழ்வும் நிலைத்து நிறகாத பொருளும், ஊரும் (இவையாவும்) நிலையாம் என்று கருதி. உனை நினையாத

சாமர்த்தியம் உடையவனாய், உன் திருவடிகள் இரண்டையும் தொழ அறியாத முழுமூடனை உனது புகழை ஓதி, மெய்ஞ்ஞானம் பெறச் செய்யும் நாள் ஒன்று உண்டாகுமோ?

போரிடையே எதிர்த்து வந்த அசுரர் கூட்டங்களின் தலை மூளை கொழுப்பு. மாமிசம் இவைகளை, தேகக் கொழுப்பும் சுதத தாதுக்களும் உள்ள பூதக கூட்டஙகளுடன வந்த பேயகள்

திருதா உணவாய் உதிரத்தினை
பலவாய் நரியொடு குடித்திட
சில கூகைகள் தாமு நடித்திட அருதீரா
அரு மா மறையோர்கள் துதித்திரு
புகா வாரண மாது தனைத் திகழ்
அணிசேர் குழல் மேவு குறத்தியை அணைவோனே
அழகான பொன் மேடை உயர்த்திரு
முகில் தாவிய சோலை வியப்புறு
அலையா மலை மேவிய பத்தர்கள் பெருமானே

---

ஹம்ஸத்வனி (8½) ரூ (4+½+1½+1½+3) 497

காரணம் அது ஆக வந்து புவிமீதே
காலன் அணுகாது இசைந்து கதிகாண
நாரணனும் வேதன் முன்பு தெரியாத
ஞான நடமே புரிந்து வருவாயே
ஆர் அமுதம் ஆன தந்தி மணவாளா
ஆறுமுகம் ஆறிரண்டு விழியோனே
சூரர் கிளை மாள வென்ற கதிர்வேலா
சோலை மலை மேவி நின்ற பெருமானே

விரைவுடன் உணவாக உண்டு, ரத்தத்தை நிரம்ப நரியுடன குடிக்க. சில கோட்டான்களும் கூட நடத்திடக் கொன்ற வீரனே!.

அரிய சிறந்த மறையவர்கள் துதிக்கின்ற, அழகிய யானை வளர்த்த மாது தேவசேனையையும், விளங்குகின்ற வண்டுகள் சேரும் கூந்தலை உடைய குறத்தி வள்ளியையும் அணைபவனே!

அழகான பொலிவுள்ள மேடைகளும், உயரத்திலுள்ள மேகத்தை அளாவும் சோலைகளும அற்புதத்தையும கொண்டு நிறைந்த (அலை- மிகுதி அலைகும மலை) மலையில வீற்றிருக்கும். அன்பர்கள் போற்றுகின்ற பெருமானே.

---

(497)

## 497

ஊழ் வினையின் காரணமாக இப்பூதலத்தில் வந்து பிறந்து
காலன் எனை நெருங்காத படிக்கு நீ மனம் பொருந்தி. நான் நற்கதி அடைய
திருமாலும் பிரமனும் முன்பு கண்டு அறியாத
ஞான நடனத்தை ஆடி வந்தருளுக
நிறைந்த அமுதம் போல இனிய, யானை மகள் தேவசேனையின் கணவனே
ஆறு திருமுகங்களையும், பன்னிரண்டு கைகளையும உடையவனே
சூரர் கூட்டங்கள் இறக்கும்படி வென்ற ஒளி வேலனே
சோலை மலை மேவி விளங்கும பெருமானே

சிம்மேந்திர மத்யமம் 498 (5½) (?) (1+½+½+½) 163

சீலமுள தாயர் தந்தை மாது மனையான மைந்தர்
சேரு பொருள் ஆசை நெஞ்சு தடுமாறித்
தீமை உறு மாயை கொண்டு வாழ்வு சதம் ஆம் இது என்று
தேடினது போக என்று தெருவூடே

வால வயதான கொங்கை மேரு நுதலான திங்கள்
மாதா மயலோடு சிந்தை மெலியாமல்

வாழு மயில் மீது வந்து தாள இணைகள் தாரும் எனதன்
மாய வினை தீர அன்பு புரிவாயே
சேல வளநாடு அ(ன்)னங்கள் ஆர, வயல் சூழும் இஞ்சி
சேண் நிலவு தாவ செம்பொன் மணிமேடை

சேரும் அமரேசர் தங்கள் ஊர் இது என வாழ்வு (2) கந்த
தீர மிகு சூரை வென்ற திறல் வீரா

ஆலவிடம் மேவு கண்டர் கோலமுடன் நீடு மன்றுள்
ஆடல் புரி ஈசர் தந்தை களி கூர

ஆன மொழியே பகர்ந்து சோலைமலை மேவு கந்த
ஆதி முதலாக வந்த பெருமாளே

(498) நல்லொழுக்கமுள்ள தாய், தந்தை, மனைவி வீடு, மக்கள், சேர்ந்துள்ள பொருள். இவைகளில் ஆசை கொண்டு, மனம் தடுமாற்றம் அடைந்து கெடுதலைத் தருவதான மாயையால், இவ் வாழ்வே நிலையானதாம் என்று எண்ணி, தேடிச் சேகரித்த பொருள் எல்லாம் தொலைந்து போக வேண்டி தெருவில்

இள வயதினராய், தனங்கள் மேரு மலை போலவும், நெற்றி பிறைச் சந்திரன் போலவும் கொண்டுள்ள மாதர்கள் மீதுள்ள காம மயக்கத்தால் என சிந்தை மெலிந்து போகாமல் (நீ)

என்றும் வாழுகின்ற மயிலின் மீது வந்து, உனது இரு பாதங்களையும் பணிகின்ற, என்னுடைய மாய வினை அழிய உனது அன்பைத் தந்தருளவாயே

தேல் மீனகள நிறைந்த வளப்பமான நாடு, அன்னங்கள் திரமிய வயல்கள் சூழ்ந்துள்ள மதில்கள், ஆகாயத்தில் உள்ள நிலாவை எட்ட, செம்பொன்னலாகிய மணி மேடைகள்

கூடியவாய்த் தேவேந்திரர் தம் ஊர் இது என்று சொல்லும்படி விளங்கும், தத்தம் ஊர் வாழ்வில் மகிழ்ச்சி கொள்ளும், தைரியம் மிகுந்த சூரனை வென்ற வலிமை மிக்க வீரனே!

ஆலவிடம் பொருந்திய கண்டத்தை உடையவர், அழகுடன நீண்ட சபையில நடனம் புரியும் ஈசர், தந்தையாா ஆகிய சிவபெருமான் மகிழ்சசி மிகக கொள்ள

சிறநததான உபதேச மொழியை உபதேசிதது, சோலைமலையில் வீறறிருககும் கநதனே! ஆதி முதலவராய் விளங்கும் பெருமானே!

தலைமயிர் கொக்குக் கொக்க நரைத்துக்
கலகலென பற்கட்டது விட்டுத்
தளர் நடை பட்டுத் தத்தடி யிட்டுத் — தடுமாறி
தடி கொடு தத்திக் கக்கல் பெருத்திட்டு
அசனமும் விக்கிச் சத்தியெடுத்துச்
சளியும் மிகுத்துப் பித்தமு(ம) முற்றி — பல காலும்
திலதயிலத்து இட்டுக் கொக்க எரிகத
திரிபலை சுக்குத் திப்பிலி யிட்டுத்
தெளிய வடித்து உற்று (று)யத்து உடல் செத்திட்டு உயிர்போமுன்
திகழ் புகழ் கற்றுச் சொற்கள் பயிற்றித்
திருவடியைப் பற்றித் தொழுது உற்றுச்
செனனம் அறுகைக்குப் பருத்திக்கு — அருள் தாராய்
கவனை விசித்துப் பககளை இட்டுப்
புரவி செலுத்திக் கைக்கொடு வெற்பைக்
கடுக நடத்தித் திட்டென எட்டிப் — பொருசூரன்
கனபடை கெடுத்துத் தட்டற விட்டுத்
திரை கடலுக்குள் புககிட ஏறிக்
களி மயிலைச் சித்ரத்தில நடத்திப் — பொருகோவே
குலிசன் மகட்குத் தம்பிய மற(று) அக்
குறவர் மகட்குச் சித்தமும் வைத்துக்
குளிர தினை மெத்த தத்து புனத்தில் — திரிவோனே

499 தலை மயிரானது கொக்கு போல வெளுத்து, நரைத்து, கலகல என்று
பல வரிசைகளின் கட்டு விட்டு, நடை தளர்பட்டு-தளர்ந்து, தத்தித்
தத்தி நடக்கின்ற (அடி இட்டு) அடி வைத்துத் தடுமாற்றத்தை
அடைந்து

தடிகொண்டு தத்தி நடந்து, ருக்காணம் அதிகமாகி, உணவும் உண்ண
முடியாது விக்கல் எடுத்து, வாந்தியாகி சளி மிகுத்து, பித்தம் மிக
அதிகரித்துப் பல முறையும்

எண்ணெயிலிட்டு எரித்தல் (ருக்க) போல உடம்பு எரிச்சல் உண்டாக, திரிபலை
சுக்கு, திப்பிலி இவை சேர்த்துக் கஷாயம் செய்து, தெளிய வைத்து வடி
கட்டி, அதனைப் பருகி, உடல் மடிந்து உயிர் போவதற்கு முன்பாக

விளங்கும் உனது புகழைக் கற்று, அப்புகழ்ச் சொற்களை நிரம்பக் கூறி
(போற்றி செய்து) உனது திருவடியைப் பற்றித் தொழுது ஓதிப், பிறப்பை
நான் அறுக்கும் வண்ணம் மேலான முக்தியின்பத்தைப் பெற அருள் புரிவீராக

சேணம் கட்டி, அங்கவடியிட்டு குதிரைகளைச் செலுத்தியும், துதிக்கை
கொண்ட கொடிய மலை போன்ற யானைகளை வேகமாக நடத்தியும்
திமீர் என்று நெருங்கி வந்து போர் செய்த சூருடைய

பெரிய படை அழிந்து நிலைகுலையவும், சூரன் அலைகடலுக்குள் ஓடிப்
புகும்படி அவனை மோதியும், களிப்பு (மகிழ்ச்சி) கொண்ட (இந்திரனாகிய)
மயில் அழகுடன் நடத்திச் சண்டையிட்ட தலைவனே!

குலிசாயுதம் கொண்ட இந்திரன் மகள் தேவசேனைக்குத் தெரியாமல்
(தேவசேனையை விட்டு விலகிச்) சென்று குறவர் மகள் வள்ளி மீது
சித்தத்தை வைத்து (வள்ளியை நாடிச் சென்று) குளிர்ந்த தினைகள்
மிகவும் பரவியுள்ள தினைப்புனத்தில் திரிந்தவனே!

கொடிய பொருப்பைக் குத்தி முறித்துச்
சமரம் வினோதத் தற்பரம் உற்றுக்
குலகிரியிற் புக்கு உறறு உறை உக்ரப் பெருமானே

---

(500) சங்கராபரணம் 500 (12) (ஈ) ஆதி-திஸ்ர நடை

துடிகொள் நோய்களோடு வற்றி
தருண மேனி கோழை துற்ற
இருமல ஈளை வாத பித்தம் அணுகாமல்
துறைகளோடு வாழ்வு விட்டு
உலக நூல்கள் வாதை அற்று
சுகமும் உளா (அ)நுபூதி பெற்று மகிழாமே
உடல் செய் கோர பாழ் வயிற்றை
நிதமும் உணவில் உயாததி
உயிரின நீடு யோக சித்தி பெறலாமே
உரு இலாத பாழில் வெட்ட
வெளியில் ஆடு நாத நிர்த்த,
உனது ஞான பாத பத்மம் உறுவேனோ
கடிது உலாவு வாயு பெற்ற
மகனும், வாலி சேயும் மிக்க
மலைகள் போட ஆழி கட்டி இகல கூர் வெய்
களம் உறு ஆனை தேர் துறுக்கி
தலைகள் ஆறு நாலு பெற்ற
அவனை வாளியால் அடு அத்தன் மருகோனே

கொடிய கிரவுஞ்ச கிரியை. வேலாற் குத்தி முறித்து, போர்புரிந்து மேம்பட்ட உனது நிலையை விளக்கிச், சோலைமலையில் புகுந்து வீற்றிருக்கும் வீரம் பொருந்திய பெருமானே.

500

(500) துடிக்கச் செய்கின்ற நோய்களால் (உடல்) வற்றி, இளமையுடன் கூடிய மேனியில் கோழை நெருக்க. கிருமல். ஈளை (காசஇருப்பு) வாதம் பித்தம் (எனப்படும் நோய்கள் என்னை) அணுகாதபடி

இல்லறம். துறவறம் என்னும் வழிகளைக் கொண்ட இவ் வாழ்வை விட்டு உலக நூல்களைக் கற்க வேண்டிய வேதனை நீங்கிச் சுகத்தைக் கொண்ட அநுபூதியைப் பெற்று (நான்) மகிழாமல்

உடலை வளர்க்கும் கோரமான பாழான வயிற்றைத் தினந்தோறும் உணவினால் வளரச் செய்து, அருள் வளரும் படியான யோக சித்தியைப் பெறுதல் நன்றோ! (நன்றன்று என்றபடி)

உருவம் கடந்த பாழ் வெளியில், வெட்ட வெளியிலே ஆடுகின்ற நாதத்துடன் (ஆடுகின்ற) கூத்தனே! உனது ஞான மயமான திருவடித் தாமரையை அடைவேனோ!

வேகமாக உலாவ வல்ல வாயு பெற்ற மகனாகிய அநுமனும். வாலியின் பிள்ளை அங்கதனும், நிரம்ப மலைகளைப் போட்டுச் சமுத்திரத்தில் அணை கட்டிப் பகைவனுடைய ஊருக்குப் போய்

போர்க்களத்தில் வந்த ஆனைகளையும். தேர்களையும் தூளாக்கித் தலைகள் பத்துக் கொண்ட ராவணனை அம்பினால் கொன்ற குணமுள்ள திருமாலின் மருகனே!

முருக வீர சூர பத்மா
தலையின் முனை நீறு படு
முடிவு அது ஆக ஆடும் நிரத்த — மயில் வீரா
முனிவர் தேவர் ஞானம் உற்ற
புனித சோலை மா மலைக்குள்
முருக வேல த்யாகர் பெற்ற — பெருமானே

---

501) சக்ரவாகம் | குந்தலவராளி 501 1/4 ஆதி

வாதினை அடர்ந்த வேல் விழியர் தங்களா
மாயம் அது ஒழிந்து — தெளியேனே
மாமலர்கள் கொண்டு மாலைகள் புனைந்து
மா பதம் அணிந்து — பணியேனே
ஆதியொடும் அந்தம் ஆகிய நலங்கள்
ஆறுமுகம் என்று — தெரியேனே
ஆன தனி மந்த்ர ரூப நிலை கொண்டு அது
ஆடும் மயில் என்பது — அறியேனே

நாதமொடு விந்து ஆன உடல் கொண்டு
நானிலம் அலைந்து — திரிவேனே
நாகம் அணிகின்ற நாத நிலை கண்டு
நாடி அதில நின்று — தொழுகேனே

வாரிய முடுகி வந்த வீரனாகிய சூரபத்மனின் தலையில் உள்ள முடி
யானது தூளாகி முடிவு பெற நிர்த்தம் ஆடும் மயில வீரனே

முனிவர்களும் தேவர்களும் ஞானம் அடைந்த பரிசுத்தத் தலமான சோலை மாமலைக்குள் வீற்றிருக்கும் முருகனே! வேலனே! தியாக மூர்த்தியாம் சிவபெருமான் பெற்ற பெருமானே!

501

(501) வாது புரியும் தன்மையே நிறைந்த வேல் போன்ற கண்களுடைய (பொது) மகளிரின் மாயத்தை அறவே நீக்கி, நான் தெளிவான அறிவைப் பெறுகின்றேன் இலை (பெற இல்லையே)

நல்ல மலர்களைக் கொண்டு மாலைகளைக் கட்டி (உனது) பெருமை மிக்க திருவடியில அலங்கரித்துப் பணிகின்றேன இலை (பணிய வில்லையே)

ஆதிமுதற் கொண்டு முடிவு வரையில் உள்ள சகல நலன்களும் ஆறுமுகம் என்ற உண்மையைத் தெரிகின்றேன் இல்லையே!

மேவுறத் தக்க ஒப்பற்ற மந்த்ர ரூப நிலையைக் கொண்டது (ஓம் எனும் பிரணவ ரூபத்தை - ஓங்கார ரூபத்தைக் கொண்டது) ஆடும் நிலையில் உள்ள மயில் என்பதை அறிந்தேனில்லையே.

நாத விந்துக்களான உடம்பை நிலையெனக் கொண்டு, நான்கு வகையான திணைகளுடன் கூடிய பூமியில் அலைந்து திரிகின்றேனே!

நாகம் (சுழிமுனை ஊடு சரப்ப வாயு - தலாயுதம் போல ஓடுகின்ற பாம்பு போன்ற பிராண வாயு (ஓடி) அடைகின்ற நாதநிலை (ஆறாவது ஆதாரமாகிய ஆக்ஞை தானத்தில் ஒளி வீசுகின்ற ஞான சதாசிவ நிலையைத் தரிசித்து விரும்பி அருநிலையில் நின்று தொழுகின்றேன் இலையே.

ஜோதி உணர்கின்ற வாழ்வு சிவம் என்ற

சோகம் அது தந்து எனை ஆள்வாய

சூரர் குலம் வென்று வாகையொடு சென்று

சோலைமலை நின்ற பெருமாளே

ஜோதி நிலையை உணர்கின்ற வாழ்வே சிவ வாழ்வு என்ற (சோகம்) ச-அகம் 'அதுவே நான்' என்ற நிலையை (நீ நான் அற்ற நிலை) சிவோகம் பாவனையைத் தந்து என்னை ஆண்டருளுக.

சூரர் குலத்தை வென்று வெற்றி மாலை சூடிச் சென்று சோலை மலையில் வீற்றிருக்கும் பெருமானே.

---

'சோகம பாவனை' என்பது சீவான்மாவும், பரமான்மாவும் ஒன்றெனப் பாவிக்கை 'அஹம பிரஹ்மம' என்பதில நான் என்னும் முனைப்பு முற்பட்டு நிற்பதால் அதை முன்பின் மாற்றி 'ஸோஹம்' என உச்சரிக்கும்படி வைதிக சைவம் பகர்கின்றது

[செ.பி.]

① **எட்டுத் திக்கர்** — பாடல் 422. அதிமதம்

இந்திரன். அக்கினி இயமன், நிருதி, வருணன், வாயு. குபேரன். ஈசானன் என்ற எண்மர் திசைபாலர்கள் [பக்கம்-68 வரி]

---

② **முப்பத்திரண்டு அறங்கள்** — பாடல்: 428 கனிதருஞ

1 ஆதுலர்க்குச் சாலை
2 ஓதுவார்க்கு உணவு
3 அறுசமயத்தார்க்கு உண்டி
4 பசுவுக்கு வாயுறை
5 சிறைச் சோறு
6 ஐயம்
7 தின்பண்டம் நல்கல்
8 அறவைச் (அநாதை) சோறு
9 மகப் பெறுவித்தல்
10 மகவு வளர்த்தல்
11 அறவைப் பிணஞ் சுடுதல்
12 மகப்பால் வார்த்தல்
13 அறவைத் தூரியம் (நல்லுடை)
14 சுண்ணம்
15 நோய்க்கு மருந்து
16 வண்ணார்
17 நாவிதர்
18. கண்ணாடி
19. காதோலை
20. கண் மருந்து
21 தலைக்கு எண்ணெய்
22. பெண்போகம்
23. பிறர் துயர் காத்தல்
24 தண்ணீர்ப் பந்தல்
25 மடம்
26 தடம்
27 சோலை
28 ஆவுரிஞ்சு தறி
29. விலங்கிற்கு உணவு
30 ஏறு விடுத்தல்
31 விலை கொடுத்து உயிர் காத்தல்
32 கன்னிகாதானம்

[பக்கம்-7 வரி]

---

③ **சூரியப் புலி கதேறி** — பாடல் 430. சீசிமுய்புர

இடை பிங்கலை என்ற இருநாடிகளின் வழியை அடைத்து, சுழுமுனை

வழியாகச் சென்று மதி மண்டலம் கடந்து, சூரிய மண்டலத்தை
அடைந்து. ஆன்மா அங்கு கோடி சூரிய ஒளியைத் தெரிசித்துப்
பேரானந்தம் அடையும் [பக்கம். 169 வாரியார்]

---

(4) பஞ்ச கோசம்    கோசம் வேறு.    430- சீசி முப்புர

கோசம் - உறை  ஆன்மாவுக்குப் பஞ்ச கோசங்கள் உண்டு

1 அன்னமய கோசம் : உணவினால் ஆன உடல்
2 பிராணமய கோசம்  வாக்கு பாணி, பாதம், பாயு, உபத்தம் என்ற
கன்மேந்திரியங்களும், பிராணனும் கூடியது
3 மனோமய கோசம்  மனம்
4 விஞ்ஞானமய கோசம் - மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற
ஞானேந்திரியங்களும். புத்தியும் கூடியது
5 ஆனந்தமய கோசம் - ஆன்மாவுக்கு உள்ளே உள்ள உறை.
[பக்கம் 168 வாரியார்]

---

(5) புனித சங்கம்- பாஞ்சஜன்யம்    431- செறிதரும

சிப்பிகள் ஆயிரம் சூழ இருப்பது இடம்புரி சங்கம்
இடம்புரிகள் " " " வலம்புரி.
வலம்புரிகள் " " " சலஞ்சலம்
சலஞ்சலங்கள் " " பாஞ்சஜன்யம் [பக்கம் 104- வாரி]

---

(6) சிவசக்திகள்    பழைய சந்ததை பெற மடப்பெண்.    431. செறிதரும்

சிவசக்திகள் நான்கு: அருட் சக்தி- பார்வதி; கோப சக்தி- துர்க்கை
போர சக்தி- காளி, புருஷ சக்தி- திருமால்
சிவசக்தி அபரை. பராபரை, பரை என முத்திறப்படும்
அபரை பிராமி, வைஷ்ணவி, ரௌத்திரி என்று மூன்று வகைப்படும்

(7) சரண கமலத்திற் பொற்கழல் கட்டியதனால் நிகழ்ந்தவை [435 புனைந்த]

1) சமுத்திரம் வெந்து கதறியது 2) சூரன் குலம் அழிந்தது
3. சக்ரவாள கிரி ஒதுங்கியது. 4) தேவர்கள் துயர் தீர்ந்தது
5) குலமலைகள் நடுங்கின 6) இந்திரன் தன் நகரில் குடி புகுந்தான்
7) பிரம்தேவர் தண்டனையடைந்து விலகினர் 8) அடியவர்களின் பகைகள் ஒழிந்தன
9) கிண்கிணியும் சதங்கையும் ஒலித்தன

[பக்கம் 22 வாரியார்]

---

(8) சரியை, கிரியை, யோகம், ஞானம் [442 ஓலமறைகள்]

சரியை புறத்தொழிலால் உருவத் திருமேனியை வழிபடுதல்
கிரியை. அகத்தொழில் புறத்தொழில் இரண்டாலும் அருவத்திருமேனியை வழிபடுதல்
யோகம்- அகத்தொழிலால் மட்டும் அருவத்திருமேனியை வழிபடுதல்
ஞானம் - அறிவு மாத்திரத்தால் அரு, உரு உருவரு என்ற மூன்றையும் கடந்த அகண்டாகார ஜோதி மயமான திருமேனியை வழிபடுதல்

[பக்கம் 282 வாரியார்]

1 சரியை - தாச மார்க்கம் - சாலோகம் தரும் திருக்கோயிலில் திரு அலகு இடுதல் மெழுகுதல், விளக்கு இடுதல், நந்தவனம் அமைத்தல், பூவெடுத்தல், மாலை அமைத்தல், இறைவனை வாழ்த்துதல், திரு வேடம் கண்டு பணிதல்

2 கிரியை புத்ர மார்க்கம் சாமீபம் தரும் பூஜை உபகரணங்களை அமைத்து பரஞ்சோதியை அர்ச்சித்து நித்தியாக்கினி காரியம் செய்தல்

3 யோகம் சக மார்க்கம் சாரூபம் தரும் புலன்களை அடக்கிய பிராண வாயுவை சலனமற நிறுத்தி ஆறுதாரங்களின் பொருளை உணர்ந்து சந்திர மண்டல அமிர்தத்தை தேக முழுதும் பரவி முச்சுடர் சோதியை திளைத்திருத்தல்

4- சன் மார்க்கம் புறத்தொழில் அகத்தொழில் இன்றி அறிவு மாத்தி
ரையானே செய்யும் வழிபாடு சாயுஜ்யம் தரும்
[பாடல் 331. செவி]

---

(9) ஆறு அங்க வேள்வி அந்தணர் [443 குருதி புலா]

வேத புருஷனுக்குரிய ஆறு அங்கங்கள்

1 நிருத்தம் - பத விவரணம் - காது
2 ஜோதிடம் - கால விசேட இலக்கணம் - கண்
3. சிக்ஷை - பத உச்சாரண இலக்கணம் - நாசி
4 வியாகரணம் - பத இலக்கணம் - வாய்
5. கற்பம் - கிரியா பிரயோக இலக்கணம் - கை
6 சந்தஸ் - செய்யுளிலக்கணம் - கால் [பக்கம் 300 வாரியார்]

---

(10) உதய மரணமில பொருள் 457- கருணை சிறிதுமில

பிறப்பு இறப்பு அற்ற இடத்தில் வெளிப்படும் செம்பொருள் அது கலை அறிவினால் கிடைக்காது. அதைப் பெற ஆறு வழிகள்

1) விழிபுனல் வர மொழி குழற அன்பு உருகி உனதருள் பரவுதல்
2) விரகு ஒழிதல் 3) உலகியல் பிணை விடுதல் 4) உரை செயல் உணர்வு கெடல் 5) உயிர் புணர் இருவினை அறுத்து போத உதறுதல்
6) எனது என்னும் மலம் அறுதல் [பக்கம். 244 வாரியார்]

---

(11) போத மலர் ஞானமாகிய மலர்கள் எட்டு 467 பேதக விரோத

கொல்லாமை ஐம்பொறி அடக்கல், பொறை அருள், அறிவு, வாய்மை, தவம் அன்பு

[பக்கம் 311 வாரியார்]

(12) முத்தர்கள் நான்கு வகையினர்   472 சிரத்தானத்தில்

முத்தர் பந்தத்தினின்றும் விடுபட்டவர்கள்

1) பிரம வித்துக்கள் - பிரம ஞானம் அடைந்தும், உலக உபகாரமாகத் தமக்கு முன் விதிக்கப்பட்ட விதிகளின்படி ஒழுகும் ஞானிகள்

2) பிரம வரர் சமாதியினின்றும் தாமே உணர்பவராகிய ஞானிகள்

3) பிரமவரியர் சமாதியினின்றும் பிறர் கலக்க எழுகின்ற ஞானிகள்

4) பிரமவரிஷ்டர் தாமேயாகவும், பிறர் கலத்தாலும் சமாதியினின்றும் எழாத ஞானிகள் - [பக்கம் 401 வாரியார்]

---

(13) இருளும் ஓர் கதிர் அநதி-பகல், கேவல சகலம்   476 இருளோர்

அநதி-மறப்பு, பகல்-நினைப்பு

ஆன்மா செயலற்றுக் கிடக்கும் நிலை ஆன்மா உழலும் நிலை. அதாவது தேகமெடுத்து பிறப்பு இறப்புக்கு உட்படும் நிலை

(14) எட்டிரண்டு - தசகாரியங்கள்   479 கட்டிமுண்டக

1 தத்துவரூபம் 2) தத்துவ தரிசனம் 3) தத்துவ சுத்தி 4) ஆத்ம ரூபம் 5) ஆத்ம தரிசனம் 6) ஆத்ம சுத்தி - 7) சிவரூபம் 8) சிவ தரிசனம் 9) சிவ யோகம் 10) சிவ போகம்

(15) எட்டிரண்டு உருவாகி 16 திருவுருவ வகைகள்   479 - கட்டி முண்டித

1 சக்திதர ஸ்வாமி 2) ஸ்கந்த ஸ்வாமி 3) தேவ சேனாபதி 4) சுப்ரஹ்மண்ய 5) கஜ வாகன - 6) சரவணபவ - 7) கார்த்திகேய - 8) குமார ஸ்வாமி - 9) ஷண்முக - 10) தாரகாரி - 11) சேனானி 12) ப்ரஹ்ம சாஸ்தா 13) வல்லி கல்யாணசுந்தர - 14) பால - 15) கிரௌஞ்ச பேதந 16) சிகிவாஹந ஸ்வாமி

[வாரியார்]

## முதல தத்துவம் · 30

பூதம : பிருதிவி அப்பு, தேயு வாயு, ஆகாயம் - .. 5
பொறி - மெய, வாய், கண, மூக்கு - செவி (ஞானேந்திரியம்) 5
புலன் - சத்தம, பரிசம, உருவம் - இரசம் - கந்தம் (தன்மாத்திரை) 5
கன்மேந்திரியம் · வாககு, பாதம பாணி, பாயுரு உபத்தம் 5
கன்ம விஷயம் · வசனம், கமனம், தானம், விசாக்கம், ஆனந்தம .. 5
கரணம் - மனம், புத்தி சித்தம், அகங்காரம் -- .. 4
அறிவு .. 1
30

## இரண்டாம தத்துவம் . 30

நாடி　இடை பிங்கலை, சுழுமுனை சிகுவை, புருடன், காந்தாரி
　　அத்தி அலம்புடை, சங்கினி, குரு } 10
வாயு　பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன்
　　நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் } 10
சயம்　அமர்வா, பகிர்வா சலவா, மலவா, சுக்கிலவா 5
கோசம்　அன்னமயம், பிராண- , மனோ- , விஞ்ஞான.. ஆனந்தமயம் 5
30

## மூன்றாம தததுவம் 36

ஆதாரம்　மூலாதாரம் சுவாதிஷ்டானம், மணிபூரகம் அநாகதம், விசுத்தி, ஆக்ஞை 6
மண்டலம்　அக்கினி ஆதித்த, சந்திர -- ... .. 3
மலம் · ஆணவம், கன்மம், மாயை .. .. .. 3
தோஷம · வாதம், பித்தம், சிலேத்துமம் .. .. 3
ஏடனை - தனேடனை தாரேடனை, புத்திரேடனை .. .. 3
குணம்　இராசதம் தாமதம, சாத்விகம் --- --- 3
இராகம் - காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம்
　　இடும்பை, அகங்காரம .. 8
வினை　நலவினை, தீவினை -- -- 2
அவஸ்தை: சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் - 5
36

(17) தத்துவங்கள் 36 (உணர்வுக் கருவிகள்)

ஆன்ம தத்துவம் (அசுத்த தத்துவம்) .. 24
வித்யா " (சுத்தா சுத்த தத்துவம்) 7
சிவ " (சுத்த தத்துவம்) 5
} 36

ஆன்ம தத்துவம் பூதம் 5, ஞானேந்திரியம் 5, கன்மேந்திரியம் 5;
புலன் (தன்மாத்திரை) 5, கரணம் 4

வித்யா தத்துவம் (7) 1) காலதத்துவம் 2) நியதி 3) கலா 4) வித்யா
5) அராக 6) புருட 7) மூலப்பகுதி (மாயை)

சிவதத்துவம் 5, நாதம், விந்து, சாதாக்கியம், ஈச்சுரம் சுத்தவித்தை
சிவம், சக்தி, சதாசிவம், மகேச்வரம் உருத்திரம்

(18) யோகபேத வகை எட்டு (அஷ்டாங்க யோகம்) 495 - ஆசைநாடி

1- இயமம் - பொய், திருடு, காமம் பொருளாசை இவை நீங்கி புலனடக்கி இருத்தல்
2- நியமம் தவம், தூய்மை, தத்துவம் ஓர்தல், மனமுவந்திருத்தல், தெய்வ வழிபடு
என்ற விதிமுறைகளில் வழுவாதிருத்தல்
3- ஆசனம் : யோகாசனங்கள்
4- பிராணாயாமம் இரேசகம் பூரகம், கும்பகம் என்று மூவகையாய்ச்
சுவாசத்தை அடக்கியாளும் யோக முறை
5- பிரத்தியாகாரம் - இந்திரியங்களை விஷயங்களிலிருந்து திருப்புகை
பிரபஞ்ச உபாதியை சிவச் சொரூபமாகப் பார்த்தல்
6- தாரணை மனத்தை ஒரு வழி நிறுத்துகை - மூலாதாரம், குதம், இதயம்
கண்டம், கபாலமாகிய தானங்களில் பிரமன் முதலிய பஞ்ச
மூர்த்திகளையும் பாவித்தல்

7 தியானம் : ஐம்புலத்தையும் அந்தக்கரணத்தையும் அடக்கிச
சிவயோகஞ் சேர்தல்

8 சமாதி - மனத்தைப் பரம்பொருளோடு ஐக்கியப்படுத்திநிறுத்துகை
[பாடல் 439 செ.பி]

19 ஆதியொடு அந்தம் ஆகிய நவன்கள 501 வாதினை யடா்ந்த
ஆறுமுகம்

ஆறுமுகங்களும்

1 ஆதிசக்தி இச்சா சகதி கிரியா சக்தி பராசக்தி. ஞான . குடிலாசக்தி

2 அ.உ.ம் நாதம் விநது, இவ்

3. ஈசன் திருமுகஙகள் ஐந்துடன் தேவி திருமுகம் ஒன்றும் சேரநது

4 ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம்

5 முற்றுணர்வுடைமை, வரம்பிலின்பமுடைமை, 3) இயல்பாகவே
பாசஙகளினின்று நீங்குதல் 4) தமவயமுடைமை 5) பேரருளுடைமை
6) முடிவிலாற்றலுடைமை

(வடமொழியில்) சருவஞ்ஞதை, திருப்தி, அநாதிபோதம், சுவதந்திரதவம்
அலுப்த சக்தி, அநநத சக்தி

ஆறு பிரகாசஙகள - ஆறுமுகங்களிலிருந்து வெளிபபடுவன

ஞானப பிரகாசம, ஞானானந்தபரகாசம, சரவஞான வியாபக
பிரகாசம், சுதத ஞான சாடசிப்ரகாசம், சரவபரிசுதத பிரம
ஞானநத அருட்ப்ரகாசம, அநாதிநித்ய பிரம ஞானாநத
திவ்ப்ரகாசம்

வாரியார் / செ பினனை